DINAMALAR 27.06.2012

# கோயம்பேடு - பரங்கிமலை மெட்ரோ ரயில் மேம்பாலப் பாதை

## டிசம்பரில் பணிகளை முடிக்க இலக்கு

சென்னை, ஜூன் 27-

கோயம்பேடு - பரங்கிமலை இடையே, மெட்ரோ ரயில் திட்டத்தில், 11 கி.மீ., தூரம் மேம்பால பாதை கட்டுமானப் பணியில், 8 கி.மீ., தூரம் பணி முடிவடைந்துள்ளது. மீதமுள்ள 3 கி.மீ., தூரம் கட்டுமானப் பணி, வரும் டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கும் வகையில் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

மெட்ரோ ரயில் திட்டத்தில், கோயம்பேடு - பரங்கிமலை இடையே, மேம்பாலத்தில் ரயில் பாதை அமைக்கப்படுகிறது. இப்பாதையை, கோயம்பேடு - அசோக் நகர் இடையே ஒரு நிறுவனமும், அசோக் நகர் - பரங்கிமலை இடையே ஒரு நிறுவனமும், மெட்ரோ ரயில் பாதை அமைக்க மேம்பாலம் கட்டி வருகின்றன.



கோயம்பேடு முதல், பரங்கிமலை வரையிலான, 11 கி.மீ., தூரத்திற்கு, மெட்ரோ ரயில் பாதை அமைக்க மேம்பாலம் கட்ட திட்டமிடப்பட்டு. தற்போது, 8 கி.மீ., தூரத்திற்கு பணி முடிக்கப்பட்டுள்ளது.

### 8 கி.மீ., நிறைவு

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில், கோயம்பேடு - பரங்கிமலை இடையே 11 கி.மீ., தூரம் ரயில் பாதை மேம்பாலத்தில் அமைக்கப்படுகிறது. 442 தூண்கள் மீது பாலம் அமைத்து, அதன் மீது ரயில் பாதை அமைக்கப்பட உள்ளது. மொத்தம் உள்ள 11 கி.மீ., தூரம் பாதையில், 8 கி.மீ., தூரம் மேம்பாலம் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. கட்டுமானப் பணியில் வட பழனி நூறடி சாலை ஐஸ்வர்யா மகால், அசோக்பில்லர், காசி தியேட்டர் மற்றும் ஈக்காட்டு தாங்கல் பகுதிகளில் இடையிடையே மொத்தம், 3 கி.மீ., தூரம் மேம்பாலம் கட்டுமானப் பணிகள் இன்னும் மீதம் உள்ளது.

இக்கட்டுமானப் பணிகளை டிசம்பருக்குள் முடித்துவிடும் வகையில் பணிகள் விரைவுப் படுத்தப்பட்டுள்ளது.

### எட்டு நிலையங்கள்

வடபழனியில் மேம்பாலப் பணி முடிவடைந்துள்ள பாதையில், மெட்ரோ ரயில் தண்டவாளம் அமைக்கும் பணி, கடந்த மாதம் துவங்கப்பட்டது. தற்போது வரை, 500 மீட்டர் தூரம் ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாதையில், கோயம்பேடு, கோயம்பேடு பஸ் நிலையம், அரும்பாக்கம், வடபழனி, அசோக் நகர் - கே.கே.நகர், சிட்கோ, ஆலந்தூர் மற்றும் பரங்கிமலை என, எட்டு இடங்களில் நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இப்பணிகள் முழுவதுமாக முடிவடைந்து, அடுத்த ஆண்டு டிசம்பரில் கோயம்பேடு - பரங்கிமலை இடையே மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நடத்தப்படவும், 2014ம் ஆண்டு ஜனவரி மாதம் ரயில் போக்குவரத்து துவங்கப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது.